1987 ஏப்ரல் 3] (திரு. கே. அன்பழகன்)

பணமாகத் தருவதற்குப் பதிலாக முழு கிராஜுவிட்டியை தொழிலாளர்களுக்குக் கொடுப்பதோடு, சேலம் மாக்னசைட் லிமிடெட் நிறுவனத்திலிருந்து 27 இலட்சம் ரூபாயைப் பெற்று, தொழிலாளர்கள் கணக்கில் வைத்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது சம்பந்தமாக பல கூட்டங்கள் நடைபெற்று முன்னாள் சேலம் மாக்னசைட் உரிமையாளரிடத்தில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அவர்களிடத்திலிருந்து 27 இலட்சம் ரூபாயை நாம் பெற்று வங்கியிலே வைத்திருக்கிறோம். மீதி 27 இலட்சம் ரூபாயை அவர்கள் தர வேண்டியிருக்கிறது. அதற்கான நடவடிக்கையை சென்ற வாரம்கூட நாம் மேற்கொண்டிருக்கிறோம். அந்தப் பணத்தை விரைவில் அந்த உரிமையாளரிடத்திலிருந்து பெற்று, தொழிலாளர்களுக்குத் தர ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சேலம் மாக்னசைட் லிமிடெட் இன்னும் கட்ட வேண்டிய 27 இலட்சம் ரூபாயைப் பெற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? அதற்கு ஒரு காலக்கெடு வைத்து, அந்தப் பணத்தைப் பெற்று தொழிலாளர்களுக்குக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 3 மாத காலக்கெடு கொடுக்கப்பட்டு அந்தக் காலக்கெடு முடிந்து விட்டது. எங்களுடைய பொருள்கள் இருக்கின்றன, அவற்றை விற்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை விற்க அனுமதி அளித்தோம். அதை அவர்கள் விற்றுவிட்டார்கள். இப்போது அவர்களுடைய பங்காக பணத்தைத் தர வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அந்தப் பணத்தைப்பெற அதிகாரிகள் மூலமாக தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

(ஈ) திருச்சி மாவட்டத்திலுள்ள கல் உடைக்கும் தொழிற்சாலைகளிருந்து வெளியேறும் புகையால் பாதிப்பு.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''திருச்சி—தஞ்சை சாலையருகில் புதிதாகத் தோன்றியிருக்கும் கல் உடைக்கும் (Crusher) தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகையினால், மூக்கிலிருந்து இரத்தம் வருதலும் மற்றும் ஆஸ்துமா போன்ற வியாதியால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

திருச்சி-தஞ்சாவூர் சாலையில் எட்டு கல் உடைக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. திருச்சி மாவட்டம் துவக்குடியில் திருச்சி-தஞ்சாவூர் சாலையில் உள்ள சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் தொழிற்சாலை வளாகத்தில் இரண்டு கல் உடைக்கும் தொழிற்சாலைகள் உள்ளன.

கற்கள், கல் உடைக்கும் இயந்திரத்தில் உடைக்கப் படுகின்றன. இவ்வாறு உடைக்கப்பட்ட கற்கள் சல்லடை அமைப்புகள் வழியாக அனுப்பப்பட்டு சிறு கற்களாகப் பிரித்து எடுக்கப்படுகின்றன. கற்களை உடைக்கும் போது தூசி உண்டாகின்றன. இந்த செயல்கள் முழுவதும் திறந்த வெளியில் நடைபெறுகின்றன. இதனால் தூசிப் பொருட்கள் சுற்றுப்புறங் களில் பரவுகின்றன.

சிறு தொழிற் வளர்ச்சிக் கழகத் தொழிற்சாலை வளாகத் தில் உள்ள மேற்படி இரண்டு கல் உடைக்கும் தொழிற்சாலை களில் ஒன்று, 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி, வாரியத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது. அந்த விண்ணப்பம் வாரியத்தின் பரி சீலனையில் உள்ளது. மற்றொரு கல் உடைக்கும் தொழிற் சாலையானது மாநில நெடுஞ்சாலைத் துறையினருக்குச் சொந்தமானது. மேற்படி தொழிற்சாலை 6-3-87-க்குள் காற்று மாசினைக் கட்டுப்படுத்த எந்தவிதமான கட்டுப்பாடு முறைகளைப் பின்பற்றுகிறது என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இது தவிர 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி புதிய தொழிற்சாலை ஒன்று தொடங்குவதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது.

கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் மற்றொரு தொழிற்சாலை யானது, சிறு தொழில் வளர்ச்சிக்கழக தொழிற்சாலை வளாகத் திலிருந்து தூரத்தில் அமைந்துள்ளது. 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி மற்ற ஆறு தொழிற்சாலைகள் வாரியத்தின் ஒப்புதல் கோரி இதுவரை விண்ணப்பிக்கவில்லை. மேற்படி தொழிற்சாலைகளின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக வாரியம் பரி சீலனை செய்ய இருக்கிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் புதிய கல் உடைக்கும் தொழிற்சாலைகள் அமைப் பதற்கு கீழ்க்கண்ட வழிமுறைகளை நிர்ணயித்துள்ளது.

(1) தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குள் எந்த கல் உடைக்கும் தொழிற்சாலைகளும் அமைக்கப்படக் கூடாது.

(2) தூசு மாசினைத் தவிர்க்க இரண்டு கல் உடைக்கும் தொழிற்சாலைகளுக்கு இடைவெளி 4 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும்.

(3) ஒன்றுக்கு மேற்பட்ட கல் உடைக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலையில் அவை செயல்பட சிரமமின்றி ஒன்றுக்கொன்று எவ்வளவு அருகாமையில் அமைக்கப்பட வேண்டுமோ அவ்வளவு அருகாமையில் இருக்க வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும்பொழுது அது ஒரு ஒட்டு மொத்தமான ஆதாரமாகக் கருதப்பட்டு அதற்கேற்றாற்போல் தூரம் நிர்ணயிக்க வேண்டும்.

சிறுதொழில் வளர்ச்சிக் கழகத் தொழிற்சாலை வளாகத்தில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள இரண்டு கல் உடைக்கும் தொழிற்சாலைகளின் இடங்களும், புதிதாக நிறுவப்பட இருக்கும் தொழிற்சாலையின் இடமும் திருச்சி கொதிகலன் தொழிற்சாலையின் சிறு முதலீட்டு உபதொழிற்சாலைகள் அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் உள்ளன. வாரியம் அந்த இடத்தின் சுற்றுப்புற காற்றின் தன்மையை ஆய்வு செய்ய உள்ளது. இந்தத் தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடத்தின் நிலைமைகளுக்கேற்பவும் வாரிய வரைமுறைகளையும் கருத்தில்கொண்டு, மேற்படி தொழிற்சாலைகளிலிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவர அறிக்கையில் துரித நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவித்திருப்பதற்கு மகிழ்ச்சி. தஞ்சை மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு 20 லிருந்து 50 நோயாளிகள் இத்தகைய தொழிற்சாலை புகையால் பாதிக்கப்பட்டு, சிகிச்சைக்காக வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே நாடு முழுவதும் இதுபோன்ற புகையினையும், கழிவு நீரையும் உண்டாக்கும் தொழிற்சாலைகளைத் தொடங்கும்போது, மாசுக் கட்டுப்பாடு நிறுவனத்திடமிருந்து 'தடையில்லை' என்று ஆணை பெற்ற பிறகுதான் இத்தகைய தொழிற்சாலைகளை நிறுவ வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். மேலும் இது போன்ற தொழிற்சாலைகளுக்குக் கடன் வழங்கும்போது, மாசு கட்டுப்பாட்டுத் துறையின் அனுமதியைப் பெற்றவர்களுக்குத்தான் கடன் வழங்கப்படுமென்ற அறிவுரையை துறை வழங்குமா?

மாண்புமிகு திரு. ப. உ, சண்முகம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, புதிதாகத் துவங்கப்படும் தொழிற் சாலைகள் மாக கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் வருகின்றன. அவர்கள் மனுச் செய்கிறார்கள். அதைப் பரிசீலித்து, இந்த வாரியம் அனுமதித்த பிறகு தான் தொழிற்சாலை இயங்க முடியும்.

(உ) அடையாறு ஓரத்தில் வெள்ளத்தடுப்பு சுவர் கட்டுவதில் தாமதம்

திரு. சைதை. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''அடையாறு ஆற்றின் ஓரத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுகிற பணி துவங்குவதில் கால தாமதம் ஏற்படுவதால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படும் வெள்ள அபாயம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னையில் உள்ள அடையாறு ஆற்றுக்கு கடந்த 1085 நவம்பர்-டிசம்பர் வெள்ளத்தால், பெரும் சேதம் ஏற்பட்டது. அடையாறு ஆற்றினை மேம்பாடு செய்யு மைய அரசு ரூ. 2 கோடி வழங்கியது. அடையாறு வெள்ளச் சேதங்களை தவிர்ப்ப தற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை தர அரசு 1986 பிப்ரவரி மாதம் ஒரு வல்லுநர் குழு நியமித்தது. அடையாறு ஆற்றுக்கு மேம்பாடு செய்ய ரூ. 12 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ள குழு பரிந்துரை செய்துள்ளது. வல்லுநர் குழு அறிக்கையின் அடிப்படையில், சில முக்கியமான பணிகளை உடனடியாக மேற்கொள்ள ரூ. 2 கோடி மதிப்பீட்டிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

2. இதில் அடையாற்றின் இடது கரையில் ஜாபர்கான் பேட்டை தாழ்பாலம் முதல் மறைமலை அடிகள் பாலம் வரை தடுப்புச் சுவர் கட்டுதலும், நந்தம்பாக்கம் பாலத்திலிருந்து கத்திப்பாரா தாழ்பாலம் வரை ஆற்றை அகலப்படுத்தி, ஆழப் படுத்துதலும் முக்கியமான பணிகளாகும். முதல் கட்டமாக, அடையாற்றில் ஜாபர்கான்பேட்டை முதல் கத்திப்பாரா தாழ்பாலம் வரை ஆற்றின் இடது கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை துவங்கப்பட்டுள்ளது.